BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# சங்க இலக்கியத்தில் பெண்கள்
# Women in Sangam Literature

முனைவர் மீ. செய்கு அப்துல் காதிர் மரைக்காயர்,

உதவிப்பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை, புதுக்கல்லூரி (தன்னாட்சி), சென்னை -600014.

**Dr. M. Sheih Abdul Kadir Maricar**

Assistant Professor, PG and Research Department of Tamil, The New College(Autonomus), Chennai – 600014.

**Abstract**

Sangam literature serves as an important source for understanding the social life, culture, and values of ancient Tamil society. It provides significant insights into the status, rights, responsibilities, and personality traits of women. This study aims to examine the position and multifaceted personality of women as portrayed in Sangam literature. Women in the Sangam age were not only the pillars of family life but also played vital roles in economic activities, child-rearing, hospitality, and social responsibilities. Literary evidence shows that women living in different ecological regions such as Kurinji, Mullai, Marutham, and Neithal actively participated in occupations related to their environment and led self-reliant lives. Furthermore, qualities such as love, wisdom, patience, sacrifice, courage, family management, and moral integrity are highlighted as essential aspects of their personality. Sangam texts, particularly Purananuru, vividly portray women's contributions to society, their heroic spirit, and their cultural values. The study reveals that women in the Sangam period enjoyed a respected position and were regarded as equal contributors to social progress. Therefore, the personality traits and life values of Sangam women continue to serve as a source of inspiration and guidance for contemporary society.

**Keywords:-** Housewife, way of life, Infant Speech, Patience, Sacrifice, Valor

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வு சங்க இலக்கியங்களில் மகளிரின் நிலை, உரிமை மற்றும் ஆளுமைப் பண்புகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. சங்க காலச் சமூகத்தில் பெண்கள் குடும்ப வாழ்க்கையின் மையமாக விளங்கியதோடு, பொருளாதாரம், விருந்தோம்பல், மக்கட்பேணல் மற்றும் சமூகப் பொறுப்புகளிலும் முக்கியப் பங்காற்றியுள்ளனர் என்பதை சங்க இலக்கியப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. குறிஞ்சி, முல்லை, நெய்தல் போன்ற நிலங்களில் பெண்கள் தங்களுக்குரிய தொழில்களில் ஈடுபட்டு சுயசார்புடன் வாழ்ந்தமை வெளிப்படுகிறது. மேலும், தாய்மை, கல்வியின் அவசியம், விருந்தோம்பல், குடும்ப நிர்வாகம், அன்பு, பொறுமை, தியாகம், வீர உணர்வு போன்ற உயரிய பண்புகள் மகளிரின் ஆளுமைத் திறன்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. குறிப்பாக புறநானூறு உள்ளிட்ட சங்க நூல்கள் மகளிரின் சமூகப் பங்களிப்புகளையும் அவர்களின் உயர்ந்த வாழ்க்கை நெறிகளையும் பதிவு செய்துள்ளன. இவ்வாய்வின் மூலம் சங்க கால மகளிர் ஆண்களுக்கு நிகராக மதிக்கப்பட்டு, சமூக முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியவர்கள் என்பது தெளிவாகிறது. எனவே, சங்க இலக்கியங்களில் இடம்பெறும் மகளிரின் ஆளுமைப் பண்புகள் இன்றைய சமூகத்திற்கும் வழிகாட்டும் உயரிய வாழ்வியல் சிந்தனைகளாக விளங்குகின்றன.

**திறவுச் சொற்கள்:**

இல்லாள், வாழ்வுநெறி, மழலை, பொறுமை, தியாகம், வீரம்

**முன்னுரை**

பெண்ணுரிமை என்பதற்கு இக்காலத்தில் தரப்படும் பொருளை வைத்துக் கொண்டு சங்க இலக்கியத்தை அணுகமுடியாது. பெண்ணுக்கு இல்லத்தில் எத்தகைய இடம் தரப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிவது தான் பெண்களின் உரிமையை அந்தக் காலத்தில் அளவிடுவதற்கு ஏற்றவழியாகும். மனைக்கு உரியவள் என்பதால் 'மனைவி' என்று சுட்டிக்காட்டப்படுகிறாள். அதுமட்டுமல்லாது 'இல்லாள்', 'வாழ்க்கைத்துணை' ஆகிய சொற்களால் அவள் சுட்டப்படுவதிலிருந்து எவ்வாறு வாழ்க்கையில் மிக இன்றியமையாத பங்கினை அவள் பெற்றிருந்தாள் என்பது போன்ற கருத்துக்களை மையமாகக் கொண்டு சங்க இலக்கியத்தில் படைக்கப்பட்டுள்ளன. பன்முகத் ஆளுமைத் திறன் பெண்களுக்கு அதிகமுண்டு திறனும் உண்டு. அவற்றை யாரும் வெளிக்காட்டிக் கொள்வதில்லை. வெளிக்காட்டுவதில்லை என்பதால் திறமை இல்லை என்பதன்று பொருள். தேவைப்படும்பொழுது தேவையான அளவு வெளிக்காட்டும் மதிநுட்பம் பெண்களுக்கு நிரம்ப உண்டு. பெண்களின் நிலைக் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்**

சங்க இலக்கியங்களில் மகளிரின் நிலை மற்றும் சமூகப் பங்களிப்புகளை ஆராய்வது. சங்க கால மகளிரின் உரிமை, கடமை மற்றும் வாழ்க்கை நெறிகளை வெளிப்படுத்துவது. மக்கட்பேணல், விருந்தோம்பல், குடும்ப நிர்வாகம் போன்ற துறைகளில் மகளிரின் பங்கினை விளக்குவது. புறநானூறு உள்ளிட்ட சங்க நூல்களில் மகளிர் குறித்த பதிவுகளை ஆராய்ந்து அவர்களின் சமூக மதிப்பை எடுத்துரைப்பது. சங்க கால மகளிரின் வாழ்வியல் சிந்தனைகள் இன்றைய சமூகத்திற்கு வழங்கும் வழிகாட்டுதல்களை விளக்குவது.

**சங்க இலக்கிய மகளிர்**

காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப மனித குலத்தின் வாழ்க்கையும் மாறிக் கொண்டே வந்திருக்கிறது. மலைப் பகுதியான குறிஞ்சி நிலத்தில் குறத்தி குறி சொல்லவும் திணைப்புனம் காக்கவும் உரிமை பெற்றிருந்த காடும் காடு சார்ந்த முல்லை நிலப் பகுதியில் ஆய்ச்சியர்கள் தபி. பால், வெண்ணெய் இவற்றை நிலங்கடந்து சென்ற விற்று வந்தார்கள். நெய்தல் நிலத்துப் பெண்கள் மீன்களைப் பண்டமாற்றமாக விற்று வருவதும். உமணப் பெண்கள் உப்பை விற்று வாழ்ந்ததையும் வைத்து இந்நிலங்களிலெல்லாம் ஆணும், பெண்ணும் சம உரிமை பெற்ற வாழ்ந்ததைக் காணமுடிகிறது. இதனைத் தொல்காப்பியர்,

*"எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்"* [1]

என்ற நூற்பாவில் பெண்கள் பாசறைக்கண் செல்லல் தகாது என்கிறம் சங்க காலத்தில் கலை வளர்த்த பாணர் கூட்டத்தினரின் வாழ்வு மன்னனை நம்பியே இருந்தது. அப்படிப்பட்ட நிலையில் கூட ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்தியதில்லை. சாதாரண உழைப்பு வர்க்கத்தினரா இருந்தவர்களும் பெண்ணுக்கு உரிமை தந்து ஆணும், பெண்ணும் சமம் என்ற நிலையில் வாழ்ந்திருக்கின்றனர்.

**மக்கட்பேணலில் மகளிரின் தன்மை**

பெண்கள் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் தனித்தன்மை நிரம்பப் பெற்றவர்கள். அவ்வாறான செய்திகள் நிரம்ப உண்டு. கிடைத்தற்கரிய செல்வமாகிய மழலைச் செல்வத்தைப் பெற்றதோடு நில்லாமல் அவற்றைப் பேணுவதிலும் சிறப்பு வாய்ந்தவர்களாகவே திகழ்ந்தனர் என்பதற்குக் கீழ்க்காணும் அடிகளே சான்று.

*"பிறப்போ ரன்ன வுடன் வயிற் றுள்ளும்*
*சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்..."* [2]

என்ற புறநானூற்றடிகள் விளக்கும்.

ஒரு தாய் வயிற்றில் பிறந்த பல பிள்ளைகளுள், கல்விச் சிறப்பால் உயர்ந்தவனைத் தாய்மனம் விரும்பும். ஒரு மகவை வளர்த்துப் பெரியவனாக்குவதைக் காட்டிலும் அவனைக் கல்வியில் சிறந்தவனாய் நல்லவனாய் இச்சமூகத்திற்குக் கொடுப்பதையே தம் கடமையாகக் கருதினர். இதனையே வள்ளுவப் பெருந்தகை,

*"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக் கேட்டதாய்"* [3]

என்கிறார்.

தன் மகனைப் பெற்றபோது அடையாத துன்பத்தை விடத் தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்லிக் கேட்கும்போது பெரும் மகிழ்வை எய்துகிறாள்.

**புறநானூற்றில் மகளிர்**

பண்டைய தமிழரின் அரசியல், வாழ்வுநெறி, பண்டைய மரபு, போர் நெறிகள் போன்றவற்றைக் கொண்ட பல்கலைக் களஞ்சியம் புறநானூறு. விளங்குகிறது. இது பண்டைத் தமிழரின் வரலாற்றுப் பெட்டகமாக மக்கள் அடைவதற்குரிய உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகும். அறமும் பொருளும் புறப்பொருளைக் கூறக்கூடிய புறநானூறு, புறப்பொருள்கள் ஆகும். புறநானூறை தமிழரின் வாழ்வியற் களஞ்சியம் என்று போற்றப்படுகிறது. வாழ்வின் உண்மைகளைப் புறநானூறு தொகுத்துச் சொல்வதைப் போல வேறு எந்த நூலும் சொல்வதில்லை. இத்தகு பெருமைமிகு புறநானூற்றுப் பெண்களின் ஆளுமைத் திறன்களை நிரம்ப காணலாம். புறநானூற்றில் மகளிருள் பலரும் வீரத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்பவர் ஒரு பெண்பாற்புலவர். நச்செள்ளையார் என்பதே அவரது இயற்பெயர். அவரது அருமையான பாடல் ஒன்றில் காக்கையைப் பற்றிப் பாடினது காரணமாகக் காக்கை பாடினியார் என வழங்கப்பட்டார் என்பது தெரிகிறது. இத்தகைய பெரு மாட்டியாரே வீரக்குடியிற் பிறந்த பெண் ஒருத்தியைப்பற்றிப் பாடியுள்ளார்.

மறக்குடிப் பிறந்த கிழவி ஒருத்தி. அவள் உடம்பு, வயது காரணமாக இளைத்துள்ளது. நரம்புகள் தடித்து மேலேழுந்து காணப்படுகின்றன. தோள்கள் தளர்ந் துள்ளன. அவள் முட்செடி போன்றுள்ள இடையினையுடை யாள். அத்தகைய கிழவிக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். ஆம்! 'இருந்தான்' என்றுதான் கூறவேண்டும். இப்பொழுது அவன் போருக்குச் சென்று இறந்துவிட்டான். போர்க்களத்தி லிருந்து மீண்ட சிலர், கிழவியிடம் பேசினர். சரியாக அறிய மாட்டாத அவர்கள், அவளுடைய மைந்தன் தன் முதுகில் புண்பட்டு இறந்தான் என்று கூறிவிட்டார்கள். தன் மகன் முதுகில் புண்பட்டான் என்றால், போரில் புறங்காட்டி ஓடி னான் என்பதுதானே பொருள்? வீரக்குடியிற் பிறந்த கிழவிக் குத் தன் மகன் செய்த இந்த இழிந்த செயல் பொறுக்கக் கூடியதா? உடனே சீறி எழுந்தாள். என்ன கூறி விட்டுச் சென்றாள், தெரியுமா? 'என் மகன் உண்மையில் புறமுதுகிற் புண்பட்டு இறந்திருப்பின், அவனுக்குப்பால் கொடுத்த என் மார்பை அறுத்து விடுகிறேன்!' என்று சபதம் செய்து புறப்பட்டாள். போர்க்களத்தில் கிடந்த உடல்களை எல்லாம் புரட்டி னாள்; தன் மகன் உடலத்தைக் கண்டாள். என்ன புதுமை! அவன் மார்பில் பட்ட காயத்துடன் இறந்து கிடந்தான். அவ் வீரத்தாய், அது கண்டு மகிழ்ந்தாளாம். எவ்வாறு? பெற்ற பொழுதைக் காட்டிலும் அதிகம் மகிழ்ந்தாளாம்.

*"நரம்புஎழுந்து உலறிய நிரம்பா மென்தோள்*
*முளரி மருங்கின் முதியோள் சிறுவன்*
*படைஅழிந்து மாறினன் என்றுபலர் கூற,*
*'மண்டுஅமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்டஎன்*
*முலைஅறுத் திடுவன் யான்!' எனச் சினைஇக்*
*கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்*
*செங்களம் துழவுவோள சிதைந்துவே றாகிய*
*படுமகன் கிடக்கை காணூஉ,*
*ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே!"*[4]

ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற் புலவர் மற்றொரு மறக்குடி மகள் பற்றிப்பாடுகிறார்.

**விருந்தோம்பல் நெறி**

பண்டைத்தமிழ்ப் பெண்களின் பண்பாட்டின் சிறந்த இல்லற நெறிகளுள் ஒன்று விருந்தோம்பல் நெறியாகும். விருந்தோம்பல் இன்றளவும் தமிழர்களிடம் காணப்படுகிறது. விருந்தோம்பற் பண்பு பெண்ணுக்கே உரியதாகும். இனிய உணவு படைத்து இன்சொல் கூறி மகிழ்விக்கும் பொறுப்பு பெண்ணுக்கே உரியதாகும். கம்பராமாயணத்தில் இராவணனாவ் கடத்திச் செல்லப்பட்டு சிறையில் இருக்கும் நிலையில் சீதை இராமனுடன் சேர்ந்திருந்து விருந்து உபசரிக்க இயலாமைப் பற்றிக் கவலை கொள்கிறாள்.

*"அருந்து மெல்லட காரிட வருந்து மென்றமுங்கும்"* [5]

என்ற பாடலடியின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சங்க இலக்கியப் பாடலில் இரவு நேரத்தில் விருந்தினர் வந்தால் கூட அவரை இன்முகத்துடன் வரவேற்று விருந்து உபசரித்து மகிழும் தலைவியின் குணங்களைத் தலைவன் பாராட்டி கூறுவதனை,

*"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்*
*புறவினதுவே பொய்யா யாணர்"* [6]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இதன் வாயிலாக பெண்ணின் விருந்தோம்பல் நெறியினைக் காணலாகிறது. மேலும் சங்க இலக்கியப் பாடல்களில் விருந்தோம்பல் பற்றிய செய்திகள் அதிகம் இடம் பெற்றுள்ளன.

**ஆளுமைப் பண்பு**

சங்க இலக்கியத்தில் சான்றோர்கள் மகளிரிடத்து அளவிற்கு அதிகமாகக் காணப்பட்ட பண்புகளாக அன்பு, அறிவு, அடக்கம், பொறுமை, குடும்ப நிர்வாகம், விருந்தோம்பல், இனியவை கூறல், வீரம், கற்பு, உறுதி, மனம் பிறழாமை, தெளிவு, தியாகம், அறம் தவிர தோழி, செவிலி முதலான உறவுகளுடன் காணப்படுவதாகக் கூறியுள்ளனர். இத்தகையப் பண்புகள் இருந்தால் தான் தலைமைப் பண்பு கிட்டும். இதனால் வாழ்வு சிறப்படையும். இப்பண்புகளைக் கொண்டு இல்லறத்தை நல்லறமாகவும். இல்லறக் கடமைகளை இனிதாகவும் நிறைவேற்றி வாழ்வாங்கு வாழ்ந்துள்ளனர். இதனைத் திருவள்ளுவர்,

*"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது"* [7]

என்று இல்லற வாழ்க்கை முறையைக் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் மதிக்கப்பட்டவர்களாகவும் மென்மைத் தன்மை கொண்டவர்களாகவும், கணவனை இழந்த பெண்கள் கூந்தலைக் கொய்தவர்களாகவும், மங்கல அணிகலங்களைக் களைந்தவர்களாகவும், இல்லற வாழ்வில் வறுமை நிலவிய போதும் மகளிர் தம் இல்லம் நாடிவந்த விருந்தினரைப் போற்றி விருந்தளித்தனர். இல்லற வாழ்வின் இனிமை மக்கட் பேற்றாலே மாண்புறும் என்பதை எண்ணி அதற்கேற்ப எல்லா நிலைகளிலும் சிறப்புறவே வாழ்ந்திருக்கின்றனர். சங்க கால பெண்களின் உரிமை வாழ்வு போராட்டம் நிரம்பியதாகவும், அப்போராட்டத்தில் வெற்றிக் கண்டதாகவும் செய்திகள் காணப்படுகிறது. அறிவியல் பெண்ணை விருப்பமில்லாமல் ஆண் தன் விருப்பத்திற்கு உடன்படுத்தும்பொழுது, ஆயிரம் யானைகளின் வலிமை ஒரு பெண்ணிற்கு வருமாம். பெண் இயல்பில் மென்மையானால் இயக்கத்தில் வன்மையும் உண்டு. பெண்கள் இன்று கால்பதிக்காத துறையே இல்லை. சங்க இலக்கியங்களில் காணப்படும் மகளிரின் வாழ்வியல் நெறிகளும் ஆளுமைப் பண்புகளும் இன்றைய பெண்களின் முன்னேற்றத்திற்கும் சமூக வளர்ச்சிக்கும் வழிகாட்டும் சிறந்த முன்மாதிரிகளாக அமைந்துள்ளன.

**அடிக்குறிப்பு**

1. தொல்காப்பியம்,பொருளதிகாரம்.சூத்திரம்- 183
2. புறநானூறு, பாடல் – 183
3. திருக்குறள், 69 வது குறள்
4. புறநானூறு, பாடல் – 278
5. கம்பராமாயணம், சுந்தர, காட்சிப் படலம் -15
6. நற்றிணை, பாடல் – 142
7. திருக்குறள், 45 வது பாடல்

**துணைநின்ற நூல்கள்**


1. இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம், கௌரா பதிப்பகம்,சென்னை, 2017
2. கம்பராமாயணம்- சுந்தர காண்டம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், பெசன்ட் நகர், சென்னை, 2017
3. கலைஞர்(உரை), திருக்குறள், சரண் புக்ஸ்,சென்னை, 2024.
4. கே.கே.பிள்ளை, டாக்டர்., தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மறுபதிப்பு 2000
5. சிதம்பரனார், சாமி., எட்டுத்தொகையும் தமிழர்பண்பாடும், அறிவுப் பதிப்பகம், சென்னை. இரண்டாம் பதிப்பு-ஜூலை 2008
6. பாலசுப்பிரமணியன், டாக்டர் சி., சங்ககால மகளிர், பாரிநிலையம், சென்னை, முதற்பதிப்பு: டிசம்பர்-1983